# திவுலப்பிட்டிய பிரதேச சபை
## கம்பஹா மாவட்டம்

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 சனவரி 30 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 சனவரி 07 ஆம் திகதி பெறப்பட்ட 2011 மே மாதம் முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 13,240,352 தொகையான முத்திரை வருமானம் அட்டுறு அடிப்படையின் படி வருடத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்ட போதிலும் 2013 சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதியின் போது பெறப்பட்ட ரூபா 30,654,375 தொகையான முத்திரை வருமானம் அவ் அடிப்படையின் படி ஆண்டிற்காக வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது அன்பளிப்பாக பெறப்பட்டிருந்த உழவு இயந்திரங்களின் பெறுமதி ரூபா 1,269,000 தொகை நாட்குறிப்பு இல. 01 இன் மூலம் கணக்குகளிற்குப் பதியப்படுகையில் கூட்டுத்தொகை ரூபா 12,690,000 ஆகக் கணக்கிடப்பட்டிருந்தமையால் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிக் கணக்கு மற்றும் அன்பளிப்புக் கணக்கு மீதி ரூபா 11,421,000 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நாட்குறிப்புப் பதிவு இல. 08 இன் படி 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை கணக்கீடு செய்யப்படுவதற்கு முடியாத காணிகளின் பெறுமதியாக ரூபா 6,433,370 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும், வழங்கப்பட்டுள்ள பட்டோலையின் படி இக் காலப்பகுதியின் போது கணக்கீடு செய்யப்படாத காணிகளின் பெறுமதி ரூபா 7,709,371 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக மேலும் கணக்கில் உள்ளடக்கப்படாத காணிகளின் பெறுமதி ரூபா 1,276,000 ஆகக் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 106,983,999 தொகையானதுடன், மூலதனச் செலவின வருமானத்தின் பங்களிப்புக் கணக்கினதும் நன்கொடைக் கணக்கினதும் கூட்டுத்தொகை ரூபா 108,522,381 தொகையானமையால் ரூபா 1,538,382 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது.

(உ) உப அலுவலகங்களில் உள்ள ரூபா 116,551 தொகையான கையிலுள்ள காசு கருத்திற்கொள்ளப்படாது வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்கப்படுகையில் பி.ச. 10 இன் படி மொத்தப் பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் கருத்திற்கொள்ளாது வங்கி வைப்புக்கள் மாத்திரம் கருத்திற்கொள்ளப்பட்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(எ) 2011 சனவரி 14 ஆம் திகதி மற்றும் 2011 பெப்ரவரி 08 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட மின் உபகரண இருப்பு முறையே ரூபா 913,000 தொகையாகவும் ரூபா 880,000 தொகையாகவும் கணக்கீடு செய்யப்படுகையில் முறையே ரூபா 91,300 தொகையும் ரூபா 88,000 ஆக கணக்கிடப்படுவது சீராக்கப்படுவதற்காக 63 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் கணக்கிற்கு உள்ளடக்கப்படாத பெறுவனவுகளான ரூபா 1,613,700 தொகையான மின்சார இருப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டு பொது வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இவ்வாறு செய்யப்படாது பொது களஞ்சியக் கணக்கு செலவு வைக்கப்பட்டமையால் களஞ்சிய இருப்பான ரூபா 1,613,700 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது 16 வழங்கல் கட்டளைகளுக்கு உரித்தாக களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 1,315,428 தொகையான பொதுக் களஞ்சிய இருப்பு வழங்கலாக கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிராமையால் பொதுக் களஞ்சிய இருப்பு அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ரூபா 18,900,000 பெறுமதியான பலகல்லவத்தயில் 2.1365 ஹெக்டேயர் காணி பொறுப்பேற்றல், நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மகநெகும கிராமிய வீதி நிகழ்ச்சித்திட்டம் 2012 இற்கு உரித்தாக 2013 ஆம் ஆண்டின் போது மீளளிக்கப்பட்ட ரூபா 5,000,000 தொகையும் செயற்திட்ட இல. 26152301037 ஆம் இலக்க மாகாண சபை செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது மீளளிக்கப்பட்ட ரூபா 300,000 தொகை நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிராமையால் ரூபா 38,009,846 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 23,560,349 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு மேலான மீண்டுவரும் செலவினம் 28,824,949 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதி நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 6 மாதங்கள் கடந்த தேறாத 16 காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 34,559 நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 செப்தெம்பர் மாதத்தின் போது வரையப்பட்ட ரூபா 57,167 பெறுமதியான 5 காசோலைகள் உரிய தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்படாது 2013 ஒக்டோபர் 07 கணக்காய்வுத் தினம் வரையிலும் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 14 இன் ஏற்பாடுகளிற்கு முரணாக செலவினத் தலைப்பு 05 இற்கு உரிய ரூபா 3,990,087 ஏற்பாட்டிற்கு மேலாக செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

(ஈ) செலவினத் தலைப்பு 03 இன் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு மேலதிகமாக மிகையான பணம் மாற்றப்பட்ட போதிலும் ஏற்பாட்டிற்கு மேலாக ரூபா 63,920,669 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2.3 வருமானம் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 8,819 | 8,871 | 6,243 |
| (ii) | வாடகை | 3,044 | 3,808 | 3,721 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 379 | 289 | 131 |
| (iv) | ஏனைய வருமானம் | 75,339 | 78,328 | 131 |

### 2.3.2 வீத வரி

திவுலபிட்டிய உப அலுவலகத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 4,732,338 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 10,000 இற்கு மேலான மீதி ரூபா 3,106,792 ஆகக் காணப்பட்டது. இம் மீதியில் 05 ஆண்டுகளுக்கும் 22 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சிலான ரூபா 292,297 தொகையான மீதி காணப்பட்டது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம்

பந்தியின் பிரகாரம் இப் பணத்தை அறவிடுவதற்காக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வீதவரி மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளமைக்கப்பட வேண்டிய போதிலும் 2003 ஆம் ஆண்டின் பின்னர் வரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 ஏக்கர் வரி**

திவுலபிட்டிய கொஹெல்அல்ல, கொட்டதெனியாவ உப அலுவலகங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ஏக்கர் மீதி ரூபா 362,822 ஆகக் காணப்பட்டது.

**2.3.4 தொழில் வரி**

திவுலபிட்டிய உப அலுவலகத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட தொழில் வரி மீதி ரூபா 331,290 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 5 ஆண்டுகள் கடந்த மீதி ரூபா 258,625 ஆகக் காணப்பட்டது.

**2.3.5 வீதவரி**

(அ) மரதகஹமுல பொதுச் சந்தைக் கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதி ரூபா 162,452 ஆகக் காணப்பட்டதுடன் இது 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் மீதியாகக் காணப்பட்ட போதிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொஹெல்அல்ல, கொட்டதெனியாவ, திவுலபிட்டிய உப அலுவலகங்களில் அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 3,302,652 ஆகக் காணப்பட்டதுடன் இது 5 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தவையாகக் காணப்பட்டன.

(இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 80/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கடை வாடகை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும்

திவுலபிட்டிய பிரதேச சபைக்கு உரித்தான கடைகள் தொடர்பாக உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2000 ஆம் ஆண்டு முதல் மரதகஹமுல பொதுச் சந்தையின் 11 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 23,461 தொகையும் திவுலபிட்டிய உப அலுவலகத்திற்கு உரித்தான வாராந்த சந்தையிலிருந்தும் மீன் கடைகளிலிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த வாடகை ரூபா 468,370 ஆகவும் காணப்பட்டதுடன் 5 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 வீட்டு வாடகை**

கொட்டதெனியாவ உப அலுவலகத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகை ரூபா 179,013 ஆகக் காணப்பட்டதுடன் இது 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**2.4 காணி கூறாக்கப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் பொது வசதிகளுக்காக கூறாக்கப்பட்டிருந்த பின்வரும் காணிக் கூறுகள் சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

| வரைபட இல. | காணியின் பெயர் | அளவு |
|---|---|---|
| 3643 | பலகல்ல கிராமத்தில் உள்ள வெரலுகஹ கொடல்ல பெயருடனான காணி | 36 பேர்ச் |
| 4280 | கொட்டதெனியாவ பர்வின்டன் தோட்டம் | 52.74 பேர்ச் |
| 510017 | ஹேன்பிட்டகெதர தெல்கஹவத்த காணி | 27 பேர்ச் |

(ஆ) 1998 நவம்பர் 13 ஆம் திகதிய 1053/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் துணைக் குறிப்பு 5(5) ஆம் பந்தியின் படி துணைக்கூறாக்கப்பட்ட காணிகளின் வீதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள் தவிர காணியில் 8 சதவீதத்திற்குக் குறைவற்ற அளவு மக்கள், சேவை மற்றும் வினோத விளையாட்டு நடவடிக்கைகளுக்காக உரிய துணைப் பிரிவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் பின்வரும் சந்தர்ப்பங்களின் போது இதன் படி செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(i) வரைபட இல. 4146 மீகஹவத்த காணி 03 ஏக்கர் 31.70 பேர்ச்

(ii) வரைபட இல. 510017 தெல்கஹவத்த காணி 1.53110 ஹெக்டயர்

(iii) வரைபட இல. 8553 குடுமிரிஸ், பின்னலந்த காணி 05 ஏக்கர் 05 ரூட் 22.5 பேர்ச்

(இ) மேற்குறித்த கட்டளையின் படி வீதிக்கு வழிவிட்டதன் பின்னர் காணி அளவின் 8% இற்குக் குறைவற்ற அளவு மக்கள் மற்றும் வினோத நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் குறித்த அளவினைப் பார்க்கிலும் குறைவான அளவில் ஒதுக்கப்பட்டிருந்த 3 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் படி 68.47 பேர்ச் சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 5(9) ஆம் பந்தியின் படி துணைப் பிரிவுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்தும் காணிக் கூறுகள் விற்பனை செய்யப்பட முன்னரும் மக்கள் சேவைகள் மற்றும் வினோத விளையாட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிப் பிரிவுகள் எவ்வித கட்டணமும் இன்றி விண்ணப்பதாரிகளால் சபைக்கு நொத்தாரிஸ் உறுதியின் மூலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதன் படி உறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பின்வரும் காணிகள் தொடர்பாக பொது வசதிகளுக்காக இடம் ஒதுக்கப்பட்டமை உரிய பதிவேடுகளின் மூலம் அவதானிக்கப்பட்டிராததுடன் அக் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **காணியின் பெயர்** | **காணியின் அளவு** |
|---|---|
| குடுமிரிஸ், பின்னலந்த (8553) | 05 ஏக்கர் 05 ரூட் 22.5 பேர்ச் |
| மீகஹவத்த காணி | 03 ஏக்கர் 31.70 பேர்ச் |

(ஊ) காணிகளின் உப கூறுகளைப் பிரிப்பது தொடர்பான அங்கீகாரம் வழங்கப்படுகையில் திட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கொட்டதெனியாவ பர்வின்டன் காணியில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்படுகையில் லொட் இல. 58 மற்றும் லொட் இல. 13 ஆக இரண்டு இடங்களில் பொது வசதிகளுக்காக முறையே 14.79 பேர்ச்களும் 39.93 பேர்ச்களுமாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தமை கணக்காய்விற்குச் சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்பட்டது. இக் காணிப் பிரிவுகள் எவ்வித பொதுச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையும் சபையிடம் உள்ள காணியொன்றாக பெயர்ப்பலகை ஒன்று பொருத்தப்பட்டிராமையும் பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஏ) மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 6 (எ), (ஏ) மற்றும் (ஓ) ஆம் பந்திகளின் படி துணைக் கூறாக்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட காணிக்கு குழாய் நீர் வசதிகள் இல்லாதிருப்பின் குடிநீர் பெற்றுக்கொள்ளப்படக் கூடிய வகையில் நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் எழுத்து மூல பரிந்துரையும் துணைக்கூறாக்கப்பட்ட காணி குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக ஏற்றதென பிரதேசத்திற்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரையும் காணிக்கு மின்சாரம் வழங்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் மின்சாரம் வழங்கப்படுவதாக மின்சார சபையிடமிருந்தான உறுதிச்சான்றிதழும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதன் படி உரிய சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்படாது நிபந்தனைகளின் கீழ் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பலகல்லவத்த வெரலுகஹ கொடல்ல காணியின் பொது வசதிகளுக்காக லொட் இல. 55 (36 பேர்ச்) ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 3643 ஆம் வரைபட இலக்க துணைக்கூறாக்கல் திட்டத்தில் அக் கூறாக்கல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பலகல்லவத்த வெரலுகஹ கொடல்ல எனும் காணி 2013 ஒக்டோபர் 24 ஆம் திகதி பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்படுகையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உரிய காணிக்காக மின்சார வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட பிரிவு மகப்பேற்றுச் சிகிச்சை நிலையத்திற்கான ஓர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக தற்காலிகமான மின் கம்பியின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) காணிக்காக நீர் வழங்கல் வழங்கப்பட்டிராததுடன் மகப்பேற்றுச் சிகிச்சை நிலையத்திற்கான கட்டிடத்திற்காக கிணற்று நீர் வழங்கப்பட்டிருந்தது.

(iv) இத் துணைக் கூறுத் திட்டம் 2011 திசெம்பர் மாதத்தின் போது நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஒக்டோபர் 24 ஆம் திகதி வரையிலும் காணிக்காக மின்சாரம், நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 வருடாந்த பாதீட்டின் படி செயற்படுத்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட ரூபா 24,000,000 கூட்டுத்தொகைப் பெறுமதியான 3 விடயங்கள் செயற்படுத்தப்படுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) 2012 இன் நான்காம் காலாண்டிற்கு உரித்தான 12% பெறுமதி சேர் வரியான ரூபா 182,469 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2013 ஒக்டோபர் 07 ஆம் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 91,957 தொகையான முத்திரை வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்